சார்பு நீதிமன்றம், குளித்தலை

OS.No.**97 / 2017**

பெயர்:சுந்தரராஜன் வா.சா. 1 தேதி **03.09.2025**

குறுக்கு விசாரணை

நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் சொன்ன முகவரியில் தான் குடியிருந்து வருகிறேன். வாதியின் டிரஸ்டின் பெயர் ஸ்ரீ சப்த ரிஷி ஆராய்ச்சி மற்றும் மருத்துவ ஸ்தாபனம். மேற்படி ஸ்தாபனத்திற்கு யார் யார் டிரஸ்டி என்றால் கிருத்திகா, ஐயப்பன், வினோத். இந்த வழக்கை யார் தாக்கல் செய்துள்ளார் என்றால் எஸ்.எஸ் மணிகண்டன் தாக்கல் செய்துள்ளார். அவர் அறக்கட்டளையின் நிர்வாக அறங்காவலர். அவர் இறந்துபோய்விட்டார். மேற்படி வழக்கை தாக்கல் செய்தது மற்றும் வழக்கை நடத்தியது அவர் தான். அவர் இறக்கும் வரை அவர் தான் வழக்கை நடத்தினார். வழக்கை நடத்துவதற்கு பொது அதிகார பத்திரம் கொடுக்கப்பட்டுள்ளதா என்றால் அறக்கட்டளை பத்திரத்தை திருத்தம் செய்து என்னை உறுப்பினராகவும், செயலாளராகவும், வழக்கை நடத்துவதற்கும் அதிகாரம் கொடுத்துள்ளார். மேற்படி அறக்கட்டளை பத்திரத்தை திருத்தம் செய்வதற்கு முன்னர் எனக்கும் அறக்கட்டளைக்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் சரிதான். மேற்படி அறக்கட்டளை எப்பொழுது உருவாக்கப்பட்டது என்றால் 14.01.1998ம் ஆண்டு உருவாக்கப்பட்டது. மேற்படி அறக்கட்டளை பத்திரத்தை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். மேற்படி அறக்கட்டளை பத்திரத்தில் என்னென்ன நிபந்தனைகள் உள்ளது என்கின்ற விவரம் தெரியுமா என்றால் தெரியும். மேற்படி அறக்கட்டளையானது பொது அறக்கட்டளையா அல்லது தனி நபர் அறக்கட்டளையா என்றால் பொது அறக்கட்டளை. மேற்படி பொது அறக்கட்டளையை பொறுத்து ஒவ்வொரு வருடமும் கணக்கு, வழக்குகளை சமர்ப்பிக்கவேண்டும் என்றால் சரிதான். மேற்படி கணக்கு, வழக்குகளை ஒவ்வொரு ஆண்டும் சமர்ப்பித்தால் தான் மேற்படி அறக்கட்டளை இயங்குவதாக அர்த்தம். மேற்படி அறக்கட்டளை தொடர்ந்து இயங்குகிறது என்பதற்கு ஏதேனும் ஆவணங்கள் உள்ளதா என்றால் உள்ளது. மேற்படி மணிகண்டன் இறக்கும் வரை மேற்படி அறக்கட்டளையில் என்ன நடந்துக்கொண்டிருந்தது என்பது அவருக்கு மட்டும் தான் தெரியும் என்றால் அவர் சொல்லி

எங்களுக்கு தெரியும். மேற்படி அறக்கட்டளையில் உள்ள விவரம் எனக்கு நேரடியாக தெரியாது என்று சொன்னால் நேரடியாக தெரியும். (முதல் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளிற்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது).

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ஒம் /-(ஈ.முத்துசாமி)
சார்பு நீதிபதி
குளித்தலை.